கனம் அங்கத்தினருக்கு என்கிருந்து அந்த விவரம் கிடைத்ததோ தெரியாது. அந்த மாதிரி அரசாங்கத்திடம் எவ்விதத் தகவலும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : 423 ஆடுகள் இறந்துவிட்டன, 12 ஆயிரம் ரூபாய் நஷ்டம் என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவ்வளவு ஆடுகளும் ஒரு மாத காலத்தில் இறந்தனவா ? ஓராண்டு காலத்திற்குள் இறந்தனவா ? ஒரு மாத காலத்திற்குள் இறந்தன என்றால் வைத்தியப் பரிசோதனை செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டதா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒரே மாதத்தில் சாகவில்லை. தொடர்ந்து இரண்டு மூன்று மாதங்களில் இறந்தன. அவை எத்தகைய நோயினால் இறந்தன என்று ஆராய்ந்து அந்த நோய் வராமல் தடுக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, சீமையில் இருந்து வந்த ஆடுகளுக்கும், இங்குள்ள ஆடுகளுக்கும் பிறந்த குட்டிகள் இறந்தன என்று குறிப்பிட்டார்கள். சீமையில் இருந்து வந்துள்ள ஆடுகளே இறந்திருக்கின்றனவா ? அப்படி என்றால் எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் : இத்தகைய முழு விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி வேண்டும்.

Films on Farm problems

* 319 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Agricultural Department has produced a series of films on Farm problems in the State; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) வெளியான திரைப்படங்களின் விவரங்கள் பின் வருமாறு :—

(1) ஜப்பானிய நெல் பயிராகும் முறை (சாதாரணப் படம்).

(2) வேர்க்கடலைப் பயிர்கள் மீது விமானத்திலிருந்து மருந்து தெளித்தல் (சாதாரணப் படம்).

(3) குப்பை உரம் தயாரித்துப் பயன்படுத்துதல் (ஈஸ்ட்மன் வர்ணப்படம்).

(4) சோளப் பயிரைத் தாக்கும் நோய்கள் (சாதாரணப் படம்).

(5) பருத்தியைத் தாக்கும் நோய்கள் (சாதாரணப் படம்).

2nd November 1966]

(6) விதைகளுக்கு மருந்து முதலியன தெளித்துப் பாது காத்தல் (சாதாரணப் படம்).

(7) நெற்பயிரைத் தாக்கும் நோய்கள் (சாதாரணப் படம்).

(8) சேமித்து வைத்த விளைபொருள்களைத் தாக்கும் நோய்கள் (சாதாரணப் படம்).

(9) உருளைக்கிழங்கு பின்கருகல் நோய், முன்கருகல் நோய், நீண்டுருண்ட புழுக்காளல் ஏற்படும் நோய் golden namtode (சாதாரணப் படம்).

திரு. வை. சங்கரன் : இந்தப் படங்கள் கிராமப் பகுதியில் உள்ள மக்களுக்குப் போட்டுக் காட்டப்படுகின்றனவா ? காட்டப்படுகின்றன என்றால் எந்த எந்த இடங்களில் போட்டுக் காட்டப்பட்டிருக்கிறது ? இல்லை என்றால் இனியாவது கிராமப் புறங்களில் போட்டுக்காட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே எடுக்கப்பட்ட படங்கள் வட்டார ப்ளாக்குகளில் போட்டுக் காட்டப்படுகின்றன. தஞ்சை, திருநெல்வேலி, மதுரை போன்ற மாவட்டங்களில் காட்டப்பட்டிருக்கிறது. மேலும் எல்லா மாவட்டங்களிலும் போட்டுக்காட்ட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

அரிசன கிறிஸ்தவர்கள்

* 320 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது நாட்டில் ஆதி திராவிடர்களாக இருந்து மதம் மாறிய கிறிஸ்துவர்களுக்கு (Harijans) , சர்க்கார் கொடுக்கும் சலுகையில் மத்திய சர்க்கார் ஓர் கொள்கையும், மாநில சர்க்கார் வேறு ஒரு கொள்கையும் வைத்திருப்பதற்குக் காரணங்கள் யாவை ?

(இ) இரண்டு கொள்கைகளும் ஒருங்கிணைய நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்கு ஏதாவது வேண்டுகோள் விடுத்திருக்கிறதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 1950-ஆம் ஆண்டு அரசியலமைப்பு (ஹரிஜனங்கள்) ஆணையின் (இது பின்னர்த் திருத்தியமைக்கப்பட்டது) 3-வது பாராவின்படி இந்து மதம் அல்லது சீக்கிய மதம் அல்லாத வேறு மதத்தைச் சேர்ந்த எந்த நபரும் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவராகக் கருதப்படமாட்டார். இந்திய அரசினர் கொள்கை அரசியலமைப்பை அடிப்படையாகக் கொண்டது.

ஹரிஜன வகுப்பிலிருந்து மதம் மாறிய நபர்கள் மாநில அரசாங்கத்தால் " உதவி பெறத் தக்க பிற வகுப்பினர் " என்று வகைப் படுத்தப்படுகின்றனர்.